# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.105/2025

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

1. IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU.
2. Deposition of witness for : Lw1/Pw1
3. Name : சிட்புபாபு
4. Father/Husband's Name :
5. Village :
6. Taluk :
7. Calling :
8. Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.08.2026.

**முதல் விசாரணை:**

1. நான் காவல் ஆய்வாளர் ரீடராக பாணியாற்றி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 05.01.2025 ம் தேதி நான் செங்கல்பட்டு ரயில்வே பாதுகாப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, நண்பகல் 11.30 மணியளவில் இரயில்வே பொருட்கள் களவுப்போனது சம்மந்தமாக தலைமை காவலர் குணசேகரன் மற்றும் விஜயக்குமார் தலைமை காவலர், எஸ்.எஸ்.சி. /பி.வே. அலுவலகம் அருகில் இரகசிய கண்காணிப்பில் இருந்தபோது, ஆஜர் எதிரி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்துக்கொண்டிருந்தவரை சந்தேகத்தின் பேரில், அவரது இடது தோளின் வைத்திருந்த வெள்ளைநிற பாலீத்தீன் பையைப் பற்றி விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முறனாக பதில் சொன்னதால், அதனால் சந்தேகம் அடைந்த அந்த வழியாக வந்த திரு. செந்தில்குமார் மற்றும் ஜெயப்பிரகாஷ் என்பவர்களை சாட்சியாக வைத்து அந்த பாலித்தீன் பையை சோதனை செய்த போது, அதில் 12 இரயில்வேற்கு சொந்தமான பாண்ரோல் கிளிப்ஸ் இருந்தது.

2. அதற்கு இரசீது உள்ளதா என்று கேட்டதற்கு, அவர் இல்லை என்று சொன்னார். அதன்பேரில், அந்த 12 இரயில்வே பாண்ரோல் கிளிப்ஸ்களை மேற்சொன்ன சாட்சிகளின் முன்னிலையில் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அதில் நானும் மற்றும் சாட்சிகளும் கையொப்பமிட்டோம். அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி கிரண் எவ்வித அச்சுறுத்தலும், தூண்டுதலுமின்றி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்கை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அதசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவ இடத்தை பார்வையிலட்டு பார்வை மகசர் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்து, அவர்களிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகசர் **அதசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு எதிரியை கைது செய்து, அந்த எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் காவல்நிலையம் வந்தேன். சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. கடந்த 06.01.2025ம் தேதி நிலைய குற்ற எண்.1/2025 பிரிவு3(a) RP(UP) ACT படி சம்பவ அறிக்கை தயார் செய்தேன். அந்த சம்பவ அறிக்கை **அதசா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே எஸ்.எஸ்.சி. /பி.வே. யிடம் களவு அறிக்கை பெற்றேன். அந்த களவு அறிக்கை **அதசா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே எதிரியை நீதிமன்ற காவலில் உட்படுத்தினேன். அதன்பிறகு வழக்கு கோப்புகளை திரு. தனசேகர், காவல் உதவியாளரிடம் மேல்விசாரணைக்காக கொடுத்துவிட்டேன்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

செங்கல்பட்டிலிருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். 05.01.2025ம் தேதி நானும், என்னுடன் திரு. குணசேகரன் மற்றும் விஜயக்குமார், தலைமை காவலர்கள் இரகசிய கண்காணிப்பில் இருந்தோம். அன்றைய தேதியில் இரகசிய கண்காணிப்பில் இருந்ததிற்கான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்திருக்கிறேனா என்றால் காவல் அடைப்பு அறிக்கை ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளேன். 05.01.2025ம் தேதி, 13.20 மணிக்கு எஸ்.எஸ்.சி. /பி.வே. அலுவலகம் அருகில் பார்த்தேன். கைது அறிக்கை சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டது. கைப்பற்றப்பட்ட பொருள் இரயில்வேற்கு சொந்தமானது என்பது குறித்து ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எஸ்.எஸ்.சி. அறிக்கை தாக்கல் செய்துள்ளார். களவுப்போனதற்கான புகார் முன்னர் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை 06.01.2025 அன்று தான் கொடுக்கப்பட்டது. கைப்பற்றுதல் மகசரில் எங்கு வைத்து கையொப்பம் பெற்றேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன். எதிரியிடமிருந்து எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், எந்தவித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu